# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 138/2018

## வழக்கு சாட்சி – அ.சா. 8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. லதா. | ஜாதி | |
| கணவர் பெயர் | ரவிக்குமார் | தொழில் | சார்பு ஆய்வாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு பிரிவு, உத்தமபாளையம். |
| கிராமம் | பிசிபட்டி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | தேனி | வயது | 40/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2025.

**(1 வது எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டது. 1 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்போது குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.04.2018 ம் தேதி வீரபாண்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 10.00 மணிக்கு தப்புக்குண்டை சேர்ந்த ராமர் மகன் சேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்.168/2018 சட்டபிரிவுகள் 379 IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் JM நீதிமன்றத்திற்கும், நகலை பிற அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

M JAYAMANI Digitally signed by M JAYAMANI Date: 2025.03.10 17:48:21 +0530

2) இவ்வழக்கில் 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திகேயன், பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகுஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் சேகர், பாண்டியராஜன், சடையாண்டி, தங்கம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே 26.04.2018ம் தேதி 16.00 மணிக்கு தப்புக்குண்டு பிரிவு அருகே வாகன சோதனை செய்தபோது அங்கே சந்தேகத்திற்கு இடமாக வந்த டி.மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த தங்கவேல் மகன் அம்பேத்கார் என்பவரை 16.00 மணிக்குகைது செய்து அவர் தானாக எந்தவித அச்சுறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சாமி (எ) மகாலிங்கம், பிச்சைமணி (எ) காளிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள **"மோட்டாரை எடுத்து ஆஜர் செய்கிறேன் " என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) அன்றையதினமே 17.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி 18.15 மணிக்கு நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அம்பேத்காரை அனுப்பி வைத்தேன். அத்தாட்சி அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குசொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். படிவம் 91 அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தைக் காட்டும் புகைப்படம் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 27.04.2018ம் தேதி நான் வாதி சேகர், மற்றும் பாண்டியராஜன் ஆகியோர்களுக்கு மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அம்பேத்கார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கண்டமனூரைச் சேர்ந்த ஈஸ்வரன் மகன் செல்வக்கனி என்பவரை ஸ்ரீரெங்கபுரம் பஸ் ஸ்டாப் அருகே காலை 11.00 மணிக்கு கைது நீதிமன்ற

M JAYAMANI Digitally signed by M JAYAMANI Date: 2025.03.10 17:48:27 +0530

காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கின் விசாரணையை முடித்து 22.05.2018 ம் தேதி வழக்கின் குற்றப்ப த்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

(1 வது எதிரி தரப்பில், சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புக் கொடுத்தும், குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று எதிரி தரப்பில் தெரிவித்ததால், அவ்வாறே கருதி முடிக்கப்பட்டது).

M JAYAMANI

Digitally signed by M JAYAMANI
Date: 2025.03.10 17:48:32 +0530